**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, TIRUVANNAMALAI.**

**SESSIONS CASE NO. 40 OF 2013**

**Deposition of Witness for : PW. 17**

| | |
|---|---|
| **Name** | : திரு.வெங்கடேசன் |
| **Father's Name** | : காத்தவராயன் |
| **Village** | : பெரியகல்லாப்பாடி மதுரா, மன்னார்பாளையம் |
| **Taluk** | : தி.மலை |
| **Caste** | : ரெட்டியார் |
| **Calling** | : விவசாயம் |
| **Religion** | : இந்து |
| **Age** | : 31 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 15-12-2020**

முதல் விசாரணை.

நான் தற்போது பெரியகல்லப்பாடி மன்னார்பாளையத்தில் வசித்து வருகிறேன். அ.சா.1. ரமேஷ் என்பவரை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். என்னுடைய வீட்டில் Home தியேட்டர் வைத்துள்ளேன். எப்போதுமே நான் பார்த்துக் கொண்டிருப்பது வழக்கம். நான் சென்னையில் இருந்து வந்தது 15.05.2012ம் தேதி. 13.06.2012ம் தேதி புதன்கிழமை பகல் 12.30 மணி அளவில் கர்ணன் என்கிற வெங்கடேசனை கட்டிப்போட்டு ஆஜர் எதிரிகள் அடித்துக் கொண்டிருந்தார்கள். நான் சத்தம் கேட்டு வந்த போது பார்த்தேன். எதிரிகளையும், கர்ணன் என்கிற வெங்கடேசனையும் பிரித்து விட்டேன். மறுபடியும் நான் வீட்டிற்கு சென்று விட்டேன். மறுபடியும் நான் சத்தம் கேட்டு வீட்டிற்கு வந்து பார்த்த போது கர்ணன் என்கிற வெங்கேடசன் சுயநினைவு இல்லாமல், தண்ணீர் வாயில் இறங்காமல் இருந்தார். அதன் பிறகு ரமேஷ் என்பவரிடம் ஆட்டோ பேசி காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவித்து விட்டு , ஆட்டோவில் காட்டாம்பூண்டி மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். அதன் பிறகு போலீஸ் ஆபிசர் வந்தார்கள். என் வீட்டிற்கு போலீசார் வந்து பார்த்து விட்டு வாக்குமூலம் வாங்கினார்கள். இன்ன நடந்தது என்று கேட்டார்கள். நானே ஆட்டோ வைத்து கர்ணன் என்கிற வெங்கடேசனை

திருவண்ணாமலை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றேன் என்று தகவல் சொன்னேன். அவர் வீட்டில் யாரும் இல்லை. போலீசார் இது சம்மந்தமாக விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.</u>**

என் வீட்டிற்கும் இறந்ததாக சொல்லப்படும் வெங்கடேசன் வீட்டிற்கும் கிழக்கு மேற்காக மன்னார்பாளையம் டூ பெரியகல்லாப்பாடி செல்லும் மெயின் ரோடு உள்ளது என்று சொன்னால் சரி. என்னுடைய வீடு தெற்கு பக்கத்தில் தெற்கு பார்த்த வாசற்படி என்றால் சரி. கூரை வீடு என்றால் சரி. இறந்த வெங்கடேசன் வீடு வடக்கு பக்கத்தில் வடக்கு பார்த்த வீடு என்றால் சரி. இறந்த வெங்கடேசன் வீட்டிற்கு அக்கம் பக்கத்தில் வீடுகள் உள்ளது. வீட்டிற்கு பக்கத்தில் ராமகிருஷ்ணன், ராமு, சின்னபையன் ஆகிய அக்கம் பக்கத்தில் குடியிருப்பு உள்ள பகுதி என்றால் சரி. என்னுடைய வீட்டிற்கும், இறந்த வெங்கடேசன் வீட்டிற்கும் சுமார் 200 அடி தொலைவு இருக்குமா என்றால் கோர்ட்டில் இருந்து வெளியே போகும் அளவு தொலைவு இருக்கும். வெங்கடேசன் சண்டையை விலக்கி விடும் போது அவர் ஆடை இல்லாமல் இருந்தார். அவரை கட்டிப்போட்டு அவர் ஆடையில்லாமல் இருந்தார். நான் இது சம்மந்தமாக உடனடியாக தச்சம்பட்டு காவல் நிலையத்தில் தகவல் கொடுத்தேன். போலீசாருக்கு தகவல் கொடுத்து மதியம் 1.00 மணிக்கு சம்பவ இடத்திற்கு வந்தார்கள். இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலமும் பதிவு செய்தார்கள் என்றால் சரி. வெங்கடேசன் இறப்பதற்கு மூன்று மாத்திற்கு முன்பு தான் அவருக்கு திருமணம் நடந்தது என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. ஆஜர் எதிரிகளுக்கும், இறந்த வெங்கடேசனுக்கும் ஏற்கனவே முன் விரோதம், பங்காளி சண்டை இருந்தது என்றால் எனக்கு தெரியாது. இந்த விவரம் எனக்கு தெரியும் என்றால் தவறு. வெங்கடேசனுடைய, இறப்பிற்கும், எதிரிகளுக்கும் எந்தவித சம்மந்தமும் கிடையாது என்று சொன்னால் தவறு. அவருடைய திருமண வாழ்க்கையில் ஏற்பட்ட சந்தேகத்தினால் தான் அவருக்கு

இறப்பு ஏற்பட்டது என்றும், எதிரிகளுக்கும், அவர் இறப்பிற்கும் எந்த சம்மந்தமும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. இறந்த ரமேஷ் குடும்பத்திற்கும், எதிரி குடும்பத்திற்கும் உள்ள நிலத்தகராறு காரணமாக தான் கொடுக்கப்பட்ட பொய் புகார் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரியல்ல. புகார்தாரர் எனக்கு உறவினர் என்பதால் அவருக்கு பவ்யப்பட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் சொன்னால் சரியல்ல. சம்பவம் என்னைத் தவிர வேறு யாருக்கும் தெரியாது.

ஒப்பம்/- வெங்கடேசன்

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/- C. Thirumagal
Principal Sessions Judge,
Tiruvannamalai.